## மாதிரி வினாத்தாள் 2019 – 2020 - II

### பத்தாம் வகுப்பு

### மொழிப்பாடம் : தமிழ்

நேரம் : 15 நிமிடம் + 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15

1. "இவன் தலையில் எழுதியதோ
கற்காலம் எப்போதும்........" இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ. தலைவிதி ஆ. பழைய காலம்

இ. ஏழ்மை ஈ. தலையில் கல் சுமப்பது

2. எழுகதிர், முத்துப்பல் – இச்சொற்களில் மறைந்துள்ள தொகைகள் முறையே –

அ. வினைத்தொகை, பண்புத்தொகை ஆ. உவமைத்தொகை, வினைத்தொகை

இ. உவமைத்தொகை, வினைத்தொகை ஈ. வினைத்தொகை, உவமைத்தொகை

3. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி –

அ. காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ. சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ. சங்கம் மருவி காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ. பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் –

அ. அகவற்பா ஆ. வெண்பா

இ. வஞ்சிப்பா ஈ. கலிப்பா

5. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்

அ. தமிழழகனார் ஆ. அப்பாத்துரையார்

இ. தேவநேயப் பாவாணர் ஈ. இரா.இளங்குமரனார்

6. கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். – இத்தொடர்களின் சரியான கலவைத் தொடர் –

அ. கூத்துக்கலைஞர் பாடவில்லை என்றால் கூடியிருந்த மக்கள் அமைதியாயிரார்.

ஆ. கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.



இ. கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கினார் என்பதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

ஈ. கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கி கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்தி வைத்தார்.

7. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ. வானத்தையும் பாட்டையும் ஆ. வானத்தையும் புகழையும்

இ. வானத்தையும் பூமியையும் ஈ. வானத்தையும் பேரொலியையும்

8. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் –

அ. நாட்டைக் கைப்பற்றல் ஆ. ஆநிரை கவர்தல்

இ. வலிமையை நிலைநாட்டல் ஈ. கோட்டையை முற்றுகையிடல்

9. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது –

அ. தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ. சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ. அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.

ஈ. அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

10. '<u>சிவப்புச் சட்டை</u>' பேசினார் – அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ. பண்புத்தொகை ஆ. உவமைத்தொகை

இ. அன்மொழித்தொகை ஈ. உம்மைத்தொகை

11. ஆலும் வேலும் பல்லுக்குறுதி,
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி – இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.

அ. ஆலமரம், வேப்பமரம் – ந, க ஆ. ஆலமரம், வேலமரம் – ச, உ

இ. அரசமரம், வேங்கைமரம் – க, உ ஈ. வேப்பமரம், ஆலமரம் – ச, சு

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.**

"செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"

12. இப்பாடலின் ஆசிரியர்

அ. கீரந்தையார் ஆ. குமரகுருபரர்

இ. நப்பூதனார் ஈ. செய்குதம்பிப் பாவலர்

13. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ் பருவம் -

அ. அம்மானை ஆ. சப்பாணி

இ. சிறுதேர் ஈ. செங்கீரை

14. 'குண்டலமும் குழைகாதும்' – இலக்கணக் குறிப்பு தருக.

அ. எண்ணும்மை ஆ. உம்மைத்தொகை

இ. பண்புத்தொகை ஈ. அடுக்குத்தொடர்

15. கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே –

அ. காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது

ஆ. நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது

இ. காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது

ஈ. இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

## பகுதி –II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4 x 2 = 8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்" – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

17. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?

18. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்காகக் கட்டப்பட்டன.

ஆ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.

19. மெய்கீர்த்திக் குறித்துக் தாங்கள் அறிந்த இரண்டு கருத்துகளை எழுதுக.

20. கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

21. பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.



### பிரிவு–2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5 x 2 = 10**

22. அ) இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.

தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்தி எழுதுக.

ஆ) மலர் உண்டு; பெயருமுண்டு – இரண்டு தொடர்களையும் ஒரே தொடராக்குக.

23. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

24. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதல்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

25. கலைச்சொல் தருக.

அ) **Ultraviolet Rays** ஆ) **Space Technology**

***குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா***

எதிர்மறையான சொற்களை எழுதுக.

அ) மீளாத் துயர் ஆ) புயலுக்கு பின்

26. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

27. 'வருக' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. தொழிற்பெயர்களின் பொருளிற்கேற்பத் தொடர்களை முழுமை செய்க.

அ) பசுமையான ...................... ஐக் ...................... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)


ஆ) காட்டு விலங்குகளைச் .............. தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ........... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

## பகுதி –III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து மூன்று குறிப்புகளை எழுதுக.



30. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஒரு சிறு உரையாடலை அமைக்க.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அம்மானை பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக்கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் தமது செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.

அ. ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்?

ஆ. ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?

இ. ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி, அதனை எவ்வாறு ஈடு செய்தார்?

## பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

**34. ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவனவற்றைச் சுருக்கமாக எழுதுக.

33. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி சிறு பத்தி ஒன்று அமைக்க.

34. அடிபிறழாமல் எழுதுக –

அ) 'விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்' எனத் தொடங்கும் காசிக்காண்டப் பாடல்

(அல்லது)

ஆ) "ஒலித்து அழுவ போன்றே" என முடியும் தேம்பாவணிப் பாடல்.



## பிரிவு–3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

35. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எழுதுக.

36. 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

37. "வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி –IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** $5 \times 5 = 25$

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை அழகுற விவரிக்க.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளை மாற்றிப் புதிய மின்விளக்குகளைப் பொருத்துமாறு மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு, திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

<u>மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பப் படிவம்</u>

**சேர்க்கை எண் :** **நாள் :** **வகுப்பும் பிரிவும் :**

1. மாணவரின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவரின் கையெழுத்து



42. அ) இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்கும் நிலையில், நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.

| | நாம் செய்ய வேண்டிய அறங்கள் | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க.

1. If you talk to a man in a language he understands, the goes to his head. If you talk to him in his Own language that goes to his heart – **Nelson Mandela**
2. Language is the road map to a culture. It tells you where its people come from and where they are going - **Rita Mae Brown**

<u>குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.</u>

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்; பல அறிவுத்துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு, பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

i) அனைத்துலக அறிவை நாம் எவ்வாறு பெறலாம்?

ii) பலநாட்டுத் தூதரகங்கள் மொழிபெயர்ப்பு மூலம் எவ்வெவற்றைக் கற்றுத் தருகின்றன?

iii) மொழிபெயர்ப்பைக் கல்வியாகக் கற்பதன் பயன்கள் இரண்டினை எழுதுக.

iv) பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் குறித்து எழுதுக.

v) மொழிபெயர்ப்புக் கல்வி இன்றைய காலக்கட்டத்திற்குத் தேவையா?

## பகுதி –V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3 x 8 = 24

43. அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான சிறு கட்டுரை ஒன்றினை எழுதி, கட்டுரையின் சுருக்கத்தினைச் சுவரொட்டியாக வடிவமைத்துத் தருக.

(அல்லது)

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி விவரித்து எழுதுக.

44. அ) சூழலுக்கேற்ற உரையாடல் ஒன்றினை எழுதுக.

**சூழல்** : வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

(அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக.

**குறிப்புகள் :** முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது – இலக்கியம் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – முடிவுரை.

(அல்லது)

ஆ) நீங்கள் சென்று வந்த அரசுப்பொருட்காட்சியில் அறிவிப்பு, அமைப்பு, சிறு அங்காடிகள், நிகழ்த்தப்பட்ட கலைகள், பேச்சரங்கம், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விளக்க அரங்குகள் போன்றவற்றைக் குறிப்புகளாக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக.